1981 பிப்ரவரி 28]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, கொடைக்கானல் ரயில் நிலையத்தைப் பொறுத்தவரை, அங்கே இறங்கியவுடன் எல்லோருமே கொடைக்கானல், மலைக்குச் சென்று விடுகிறார்கள் என்ற விவரம்தான் இருக்கிறது. அங்கே இப்படிப்பட்ட ஒரு தங்கும் விடுதியை ஏற்படுத்தினால், தக்க வருமானம் கிடைக்குமா என்பது ஆராயப்படவேண்டிய ஒன்று. என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையைச் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குத் தெரிவித்து, சாலை ஓர தங்கும் விடுதிகள் ஆங்காங்கே ஹோட்டல்கள் கட்டுவதைப்போல் கட்டினால் பலன் அளிக்குமா என்பதைப் பரிசீலிக்கும்படி அரசு கேட்டுக் கொள்ளும்.

மருதமலைக் கோயில்.

*வினா எண் 307— திரு. மா. சின்னராஜ்: மாண்புமிகு செய்தி-அற நிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவைக்கு அருகிலுள்ள மருதமலைக் கோவில் ஆண்டு வருமானம் (கடந்த மூன்று ஆண்டுகள்) எவ்வளவு?

(ஆ) இந்தக் கோவில் மூலம் என்ன சமுதாய கல்விப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன?

(இ) இவற்றிற்காக செலவிடப்படும் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) ஆலயத்தின் கடந்த மூன்று ஆண்டுகள் வரி விதிப்புக்கு உட்பட்ட வருமானம் பசலி 1387 (1977-78) ரூ. 7,39,100, பசலி 1388 (1978-79) ரூ. 8,60,895, பசலி 1389 (1979-80) ரூ. 10,46,912.

(ஆ) இந்த ஆலயத்தின் சார்பாக சமுதாய நலப்பணிகளுக்காக மாணவ மாணவியருக்கான உயர் நிலைப் பள்ளி ஒன்றும், சித்த வைத்திய சாலை ஒன்றும், அன்பு இல்லம் ஒன்றும் நடத்தப்பட்டு வருகின்றன.

(இ) இவற்றிற்காக 1389-ம் பசலியில் (1979-80) செலவிடப்பட்ட தொகை ரூ. 70,143 ஆகும்.

திரு. கோவைத் தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோயிலிலே கிடைக்கும் வருமானத்தை கொண்டு அங்கே ஒரு சுற்றுலா மாளிகையை ஏற்படுத்த அரசு முன்வருமா? அல்லது அங்கே பணியாற்றக் கூடிய ஊழியர்களுக்கும் அல்லது தங்க வருகின்ற மற்றவர்களுக்கும் விடுதிகள் கட்டுவதற்கு அல்லது குறைந்த வாடகையில் வீடுகள் கட்டுவதற்கு இந்த அரசுக்கு உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அற நிலையத்தின் வருமானத்தைக் கொண்டு சுற்றுலா மாளிகைக் கட்டிடத்தைக் கட்ட இயலாது, இப்போது வரக்கூடிய வருமானத்திலிருந்து அங்கு நடத்தக்கூடிய உயர் நிலை பள்ளிக்கு 2½ இலட்சம் ரூபாய் திட்டத்திலே ஒரு கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அங்கே வருகின்ற பக்தர்கள் தங்குவதற்கு விடுதிகள் கட்டவேண்டும் என்றால் அப்படி விடுதிகள் அங்கே கட்டப்படுவது பயனளிக்குமா, தேவையா என்பதைப் பற்றி அரசு முதலில் ஆராய்ந்து பார்த்தாக வேண்டும்.

வாசுதேவநல்லூர் ஒன்றியத்தில் சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டம்.

*வினா எண். 308—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் வாசுதேவ நல்லூர் ஊராட்சி ஒன்றியத்தை சிறு உழவர் மேம்பாட்டு ஏஜென்ஸி (எஸ். எப். டி. ஏ.) மூலம் மேம்படுத்தும் பகுதியாக குறிப்பிட வேண்டுமென அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) எஸ். எப். டி. ஏ. எந்த அடிப்படையில் முடிவு செய்ய படுகிறது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) மற்றும் (ஆ) தலைவர் அவர்களே, மைய அரசின் அறிக்கையைப் பின்பற்றி ஒருங்கிணைக்கப்பட்ட கிராம வளர்ச்சித் திட்டத்தோடு இணைத்து, எஸ். எப். டி. எ. எல்லா வட்டாரங்களிலும் செயல்பட இருக்கிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வாசுதேவ நல்லூர் ஒன்றியம் மிகவும் பின்தங்கிய பகுதி, பெரும்பாலும் சிறிய விவசாயிகள் வாழும் பகுதி, இந்தப் பகுதியில் எஸ். எப். டி. ஏ. கிடையாது ; தன்னிறைவுத் திட்டம் கிடையாது. எனவே, அவர்களைப் பாதுகாக்கின்ற முறையிலே மீண்டும் இதைப் பரிசீலித்து, மத்திய அரசை வற்புறுத்தி அங்கே இந்த எஸ். எப். டி. ஏ. திட்டத்தையும், தன்னிறைவுத் திட்டத்தையும் அந்த பிளாக்கிலே அமுல் படுத்துவதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, எஸ். எப். டி. ஏ. ஐ. ஆர். டி. பி., திட்டம் எல்லா வட்டாரங்களிலும் செயல்பட இருக்கிறது என்று குறிப்பிட்டேன். எல்லா வட்டாரங்களிலும் என்று சொல்லும்போது, அது இந்த வட்டாரத்திற்கும் பொருந்தும்.